# பத்திரிக்கை செய்தி

## பணப்பலனை வழங்க ரூ.10,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய சார்நிலை கருவூல அலுவலர் கைது

புகார்தாரர் திரு.அவினாஸ், அல்ராஜ் தெரு, பாலக்கோடு நகரம், தருமபுரி மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் ஆசிரியையாக பணிபுரிந்து வந்தார். புகார்தாரரின் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் மருத்துவக்குழுவினரின் பரிந்துரைப்படி விருப்ப ஓய்வு பெற்றுள்ளார். விருப்ப ஓய்விற்கு பின்னர் புகார்தாரருக்கு பணப்பலன் வழங்க உரிய கடிதம் கிடைக்கப்பெற்றுள்ளது. பணப்பலன் பெற்றுத்தர திரு.ராமச்சந்திரன், கருவூல அலுவலர், பாலக்கோடு சார்நிலை கருவூல அலுவலகம், தருமபுரி மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.10,000/- லஞ்சமாக தர வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தருமபுரி மாவட்ட பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 29.04.2025, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.ராமச்சந்திரன். கருவூல அலுவலர், லஞ்ச பணம் ரூ.10,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.